Previous Date of examination :

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 04 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ.சா. 63 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | வயது | 44 /2022 |
| கணவர் பெயர் | ஜெயசந்திரன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது திருவாரூரில் வசித்து வருகிறேன். எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும். நான் ஏற்கனவே எல்.ஐ.சி.-யில் 13 ஆண்டுகள் திருத்துறைப்பூண்டியில் வேலை பார்த்தேன். அப்போது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியின் அண்ணன் ஐயப்பன் மூலமாக எனக்கு 2 வது எதிரி கோவிந்தலெட்சுயை தெரியும். என்னிடம் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி 2015-2016 ம் வருட வாக்கில் தனக்கு சிரமமாக உள்ளதாகவும் அதனால் கடனாக ரூ.2 லட்சம் பணம் தருமாறும் என்னிடம் கேட்டார். என்னிடம் பணம் இல்லாததால் நான் தேனியை சேர்ந்த புகழேந்திரன் என்பவரிடம் பணம் கொடுத்துள்ளேன். அவரிடம் கேட்டு வேண்டுமானால் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லி அவரின் போன் நம்பரை கொடுத்தேன். ஆனால் அவர் பணம் இல்லை என சொல்லிவிட்டதாக எனக்கு போனில் சொன்னார். அதன் பிறகு புகழேந்திரனுக்கும் 2 வது எதிரிக்கும் அறிமுகமாகி 2 வது எதிரி அவரின் அத்தான் ராஜசேகரிடம் சொல்லி புகழேந்திரனுக்கு ராஜசேகரன் என்பவர் பணம் கொடுத்து வந்ததாக போனில் புகழேந்திரன் என்னிடம் சொன்னார். எனது வீட்டிற்கு 2 வது எதிரியை 2018 ம் ஆண்டு போலிசார் அழைத்துக்கொண்டு வந்தார்கள். போலிசார் என்னிடம் 2 வது எதிரி எனக்கு பணம் கொடுத்துள்ளாரா என்று கேட்டார்கள். அதற்கு இரண்டு வருடமாக எனக்கும்,அவருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்று

சொன்னேன். தேனியில் உள்ள ஒரு நபருக்குத்தான் பணம் கொடுத்துள்ளார் என்று சொன்னேன். டி.எஸ்.பி. ஆபீஸிலிருந்து எதற்காக எனது வீட்டிற்கு போலிசார் அழைத்து வந்தார்கள் என தெரிந்துக்கொண்டேனா என்றால் 2 வது எதிரி வேலை வாங்கி தருவதாக பணம் வாங்கியுள்ளதாகவும்,அதனை என்னிடம் கொடுத்துள்ளாரா என கேட்பதற்காகவும் அழைத்து வந்ததாக எஸ்.ஐ. மகாலெட்சுமி என்பவர் என்னிடம் சொன்னார். 2 வது எதிரி எங்கு குடியிருக்கிறார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் 2 வது எதிரி முதலில் அரசு குடியிருப்பில் இருந்தபோது தெரியும். அதன் பிறகு இடம் மாறியது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தற்போது சொன்ன விபரத்தைதான் போலிசார் என்னை விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

புகழேந்திரன், சக்திவேல் கேட்டுக்கெண்டுதற்கிணங்க போலிசார்விசாரணையில் சொல்லாத சங்கதிகளை 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தொடர்புபடுத்தி புதிதாக முன்வைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் 2 வது எதிரிக்கும் முதல் விசாரணையில் சொல்லியவாறு பழக்கம்,வழக்கம் உள்ள விபரமும் புகழேந்திரனுக்கு தெரியுமா என்றால் தெரியும். எல்.ஐ.சி-யில் நான் வேலை பார்த்தபோது என்னுடன் பணிபுரிந்த மனோகரன் மகன் ஐயப்பன் 1வது எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்து ஏமாந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் நான் வேண்டும் என்றே மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது 2 வது எதிரியை அவரது சகோதரர் ஐயப்பன் மூலம் தெரியும் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் 2 வது எதிரிக்கு ஐயப்பன் என்ற சகோதரர் கிடையாது என்றும், நான் வேண்டும் என்றே 2 வது எதிரியை தொடர்புபடுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரியின் மகள் பெயர் எனக்கு தெரியாது. 2 வது எதிரியுடன் எனக்கு பழக்கம்,வழக்கம் இருந்திருந்தால்

அவரது குடும்ப விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், 2 வது எதிரியை பற்றி எதுவும் தெரியாமல் புகழேந்திரனும் 1வது எதிரியும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் புகழேந்திரனுக்கும் பழக்கம், வழக்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**